# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



## இயேசுவின் பிறப்பு


எழுதியவர்: Edward Hughes
சித்தரிப்பவர்: M. Maillot
மொழிபெயர்ப்பாளர்: DASAN JEYARAJ
தழுவியவர்: E. Frischbutter; Sarah S.



**கதைகள்** 60 **ல்** 36

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*



உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.


Tamil

நீண்ட காலங்களுக்கு முன், தேவன் காபிரியேல் தூதனை யூதேயா தேசத்திலுள்ள ஒரு அழகான இளம் பெண்ணாகிய மரியாளிடம் அனுப்பினார்.



1

“நீ ஒரு குமாரனைப் பெறுவாய். அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக உன்னதமானவரின் குமாரன் என்று அவர் அழைக்கப்படுவார்.



2


அவர் என்றென்றும் அரசாட்சி
செய்வார்'', என்று அவன்
கூறினான்.
3


“இது எப்படியாகும் ?'' என்று வியப்புடன்
அந்தப் பெண் கேட்டாள். “நான்
புருஷனை அறியேனே என்றாள்''.
குழந்தையானது தேவனாலே
உண்டாகும். உலகப்
பிரகாரமான தந்தை
இருக்காது என்று
தேவதூதன்
கூறினான்.
4


தேவதூதன் மரியாளிடத்தில் உன்
இனத்தாளாகிய எலிசபெத்தும் முதிர்வயதில்
கர்ப்பந்தரித்திருக்கிறாள்
என்றான். இதுவும் ஒரு
அற்புதம் அல்லவா.
கொஞ்ச நாட்களுக்கு
பின்னர் மரியாள்
எலிசபெத்தை
சந்தித்தாள்.
அவர்கள் இரண்டு
பேரும் சேர்ந்து
தேவனை துதித்தனர்.
5


யோசேப்பு என்னும் பேர்
கொண்ட மனிதனை விவாகம்
செய்ய மரியாள் நிச்சயிக்கப்
பட்டிருந்தாள்.
மரியாள் குழந்தை
உண்டாயிருக்கிறாள்
என்று
கேள்விப்பட்டு
யோசேப்பு
துக்கமடைந்தான்.
வேறுயாராவது
தகப்பனாக
இருப்பார்களோ என்று
அவன் யோசித்தான்.
6


யோசேப்புக்கு தேவதூதன் கனவிலே
தோன்றி பிறக்கப் போகிற குழந்தை
தேவனுடைய குமாரன். ஆகையால்
மரியாள் இயேசுவை கவனிக்க
யோசேப்பு உதவி செய்ய வேண்டும்
என்று கூறினான்.
7


யோசேப்பு தேவனை நம்பி,
கீழ்ப்படிந்தான். அவன்
தேசத்தின் சட்டத்திற்கு
கீழ்ப்படிந்தான்.
8


புதிதாக உருவாக்கப்பட்ட சட்டத்தின்படி, வரியை செலுத்துவதற்காக, யோசேப்பு மரியாளை அழைத்துக் கொண்டு, தங்கள் சொந்த ஊரான பெத்லகேமிற்குச் சென்றான்.
9


மரியாள் பிரசவிப்பற்கு நேரமாயிற்று. ஆனால் தங்குவதற்கு இடம் கிடைக்கவில்லை. சத்திரங்கள் எல்லாம் நிரம்பியிருந்தன.
10


கடைசியாக யோசேப்பு ஒரு முன்னனையை கண்டுபிடித்தான். அங்கே, குாந்தை இயேசு பிறந்தார்.
11


பிராணிகளுக்கு உணவு வைக்கிற இடமான மாட்டுக் கொட்டிலில் குழந்தையை மரியாள் இடத்தினாள்.
12


அருகாமையிலே, மேய்ப்பர்கள் தூங்குகிற மந்தையை காத்துக் கொண்டிருந்தார்கள்.
13


தேவதூதன் அவர்களுக்கு தோன்றி, இந்த அதிசயமான செய்தியை சொன்னான்.
14


இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர்
உங்களுக்குத் தாவீதின் ஊரிலே
பிறந்திருக்கிறார்.
15


பிள்ளையை முன்னணையிலே
கிடத்தியிருக்கக் காண்பீர்கள்.
16


திடீரென்று, அநேக பிரகாசமான
தேவதூதர்கள் தோன்றி, ...
17


... “உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு
மகிமையும், பூமியிலே சமாதானமும்,
மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக”...
18


... என்று கூறி தேவனை
மகிமைப்படுத்தினார்கள்.
19


மேய்ப்பர்கள் மாட்டுக் கொட்டிலிக்கு விரைந்து
சென்றார்கள். குழந்தையை கண்ட பின்னர்,
தேவதூதன் தங்களுக்கு சொன்னதையும்
தாங்கள் கண்டதையும் யாவருக்கும்
சொன்னார்கள்.
20


நாற்பது நாட்களுக்கு பின்னர்,
யோசேப்பும், மரியாளும், இயேசுவை
எருசலேம் தேவாலயத்துக்கு
கொண்டு வந்தார்கள்.
அங்கே, சிமியோன்
என்ற மனிதன்
குழந்தைக்காக
தேவனை துதித்தான்
மற்றும் அன்னாள்
என்ற தேவனுடைய
ஊழியக்காரி தேவனுக்கு
நன்றி செலுத்தினாள்.
21
அவர்கள் இரண்டு
பேரும், இயேசு
தேவனுடைய குமாரன்,
வாக்குத்தத்தம்
பண்ணப்பட்ட
இரட்சகர் என்று
அறிந்திருந்தார்கள்.
யோசேப்பு இரண்டு
புறாக்களை பலியாக
செலுத்தினான்.
22
ஏழை மக்கள்
தங்கள் புதிய
குழந்தைகளை
தேவனுக்கு
அர்ப்பணிக்கும்
போது இப்படி செய்ய
வேண்டுமென்று
தேவனுடைய
கற்பனை கூறுகிறது.
23
கொஞ்ச காலத்துக்குப்
பின்னர், வானத்திலே
ஒரு விசேஷமான
நட்சத்திரம் தோன்றி
கிழக்கு
தேசத்திலே
உள்ள ஞானிகளை எருசலேமிக்கு
வழி நடத்தியது. ‘‘யூதருக்கு
இராஜாவாக பிறந்திருக்கிறவர்
எங்கே ? நாங்கள் அவரை வழிபட
வேண்டும்’’ என்று கேட்டார்கள்.
24
ஏரோது ராஜா சாஸ்திரிகளை
பற்றி கேள்விப்பட்டான்.
கலக்கமுற்றவனாக,
‘‘இயேசுவை கண்டால்
எனக்கும் சொல்லுங்கள்,
நானும் அவரை வழி பட
வேண்டும்’’ என்று ஏரோது
சொன்னான். ஆனால்
அவனோ பொய் சொன்னான்.
ஏரோது இயேசுவை
கொலை செய்ய
விரும்பினான்.
25
மரியாளும், யோசேப்பும் இளம் குழந்தையும்
இருந்த இடத்திற்கு நட்சத்திரமானது
சாஸ்திரிகளை வழி நடத்தியது.
பயணிகளான அவர்கள்,
முழங்காலிட்டு பணிந்து,
இயேசுவுக்கு தங்கத்தையும்,
பரிமளத்தையும்
காணிக்கையாக
கொடுத்தனர்.
26













இயேசுவின் பிறப்பு

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

மத்தேயு 1–2, லூக்கா 1–2

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.